**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>**

**IP No : 3/2021** **நாள் 23.02.2026**

1ம் மனுதாரர் முத்துபிரகாசன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு ம.சா.1 ஆனவரை முதல் விசாரணை செய்யப்படுகிறார் வாக்குமூலம் 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் திருமதி.K.சுப்புலட்சுமி, என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துபிரகாசன் | தாலுகா | |
| த–பெ | முருகேசன் | தொழில் | |
| கிராமம் | ஸ்ரீவில்லிபுத்தூர் | வயது | 37 |

**<u>முதல் விசாரணை</u>**

எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும்.

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

1) 05.03.2018ம் தேதியிட்ட ஈடல் வெஸ் நிதி நிறுவனத்திற்கு நாங்கள் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் கலர் ஜெராக்ஸ் தாக்கல்.

2) 17.08.2017ம் தேதியிட்ட நாங்கள் நடத்தி வந்த பர்னிச்சர் வியாபாரத்திற்கான என் பெயருக்கு வழங்கப்பட்ட வணிகவரி சான்றிதழ் கணினி நகல் **ம.சா.ஆ.1**.

3) 06.03.2020ம் தேதியிட்ட 11ம் எதிர்மனுதாரருக்கு நாங்கள் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2**.

4)என் தகப்பனாரின் இறப்பு சான்று ஜெராக்ஸ் தாக்கல்.

5) சாய் பர்னிச்சர் நிறுவனத்தின் என் பெயரில் பராமரிக்கப்பட்ட வங்கி கணக்கு புத்தகம் அசல் **ம.சா.ஆ.3**.

6) சாய் பர்னிச்சர் நிறுவனத்தின் என் தம்பி பெயரில்(2ம் மனுதாரர்) பராமரிக்கப்பட்ட வங்கி கணக்கு புத்தகம் அசல் **ம.சா.ஆ.4**.

**(குறுக்குவிசாரணை 10 மற்றும் 11 எதிர்மனுதாரர் தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 23rd day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.